*[பேரவைத் தலைவர்] [2011 ஆகஸ்ட் 16*

*கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன 23–8–2011 அன்று பேரவையில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைப் பேரவையின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## (ஆ) மானியக் கோரிக்கைகள், 2011-2012, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழிதல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of clause 3 of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the financial year 2011–2012." *(குறுக்கீடு)*

# 3. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்

## கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, மானியக் கோரிக்கை எடுத்தாகிவிட்டது.* Please. *(குறுக்கீடு)*

# 4. தகவல் கோரல்

## உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று தமிழ் இளைஞர்களுடைய கருணை மனுக்கள் நிராகரிக்கப்பெறும் வேளையில்..*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, நாளைக்குப் பார்க்கலாம். (குறுக்கீடு) நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.* Reply *வரட்டும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாங்கள் கொடுத்த அறிவிப்புகள் என் ஆய்வில் உள்ளன. அவை குறித்து என் அறைக்கு வந்து பேசலாம், உட்காருங்கள்.*